# KAYALPATTINAM MUNICIPALITY

KAYALPATTINAM MUNICIPALITY COUNCIL MONTH OF MAY FORM 3

Minutes of the Meeting held on 30.05.2018

<table>
<tr><th>Date of council meeting</th><th>Deceison Number</th><th>Subject of the Agenda</th><th>Resolution</th></tr>
<tr><td>30.05.2018</td><td>1569</td><td>மன்றப்பொருள்:-1<br>தூத்துக்குடி மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ந.சுந்தரலிங்கம் என்பவர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக காயல்பட்டணம் நகராட்சிக்கு ஒரு வழி பணி மாறுதல் வேண்டி விண்ணப்பித்துள்ளதன்படி உரிய அனுமதி வழங்கி தூத்துக்குடி மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி தூத்துக்குடி மாநகராட்சி இளநிலை உதவியாளர் திரு.ந.சுந்தரலிங்கம் என்பவரை இந்நகராட்சியில் இளநிலை உதவியாளர் காலிப்பணியிடம் உள்ளதால் பணியில் சேர்த்துக் கொள்ள எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்பதை தெரிவிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.05.2018</td><td>1570</td><td>மன்றப்பொருள்:-2<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்க்கண்ட பயனாளிகளுக்கு இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு நகராட்சி வறுமைக்கோடு பட்டியலில் பயனாளிகளின் பெயர்களை சேர்த்துக்கொள்ள தனி வட்டாட்சியர்,திருச்செந்தூர் அவர்கள் பரிந்துரை செய்து ந.க.டி2–862–2018, நாள்:26.04.2018 கடிதம் அனுப்பியுள்ளார். எனவே மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளபடி காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பயனாளிகளின் பெயர்களை இந்நகராட்சி வறுமைக்கோடு பட்டியலில் தரம் 1–ல் சேர்க்க மன்ற அனுமதிக்கு.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர் மற்றும் முகவரி</th></tr>
<tr><td>1.</td><td>திருமதி.ரஹிம் முனிசா,க/பெ.சேக் முகம்மது,65/9F,சந்தன மாரியம்மன் கோவில் தெரு,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>2.</td><td>திரு.சேக் முகம்மது,த/பெ.இப்ராஹிம்,65/9F,சந்தன மாரியம்மன் கோவில் தெரு,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>3.</td><td>திருமதி.திருமலை,க.பெ.(லேட்)ராஜகோபால்,11/10,வண்டிமலைச்சி அம்மன் கோவில் தெரு,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>4.</td><td>திருமதி.சவரிமுத்து,க/பெ.ராயப்பன் கோமாஸ்,24C,சிங்கித்துறை,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>5.</td><td>திருமதி.தோமினிக்குதலேன்,க/பெ.துரைராஜ்,25C,சிங்கித்துறை,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>6.</td><td>திருமதி.கிரிசில்டா,க/பெ.ஆண்ட்ரூஸ்,54C,சிங்கித்துறை,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>7.</td><td>திருமதி.அல்போன்ஸ்,க/பெ.தேவசகாயம்,27/119,சிங்கித்துறை,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>8.</td><td>திருமதி.ராணி,க/பெ.ஜோசப்,10C,சிங்கித்துறை,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>9.</td><td>திருமதி.கதீஜா பீவி,க/பெ.அமீர்ஹம்ஷா,89,சிங்கித்துறை,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>10.</td><td>திருமதி.பீமா,க/பெ.அப்துல்லா,4C,சிங்கித்துறை,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>11.</td><td>திருமதி.சீதையம்மாள்,க/பெ.வன்னியபெருமாள்,32/5,சேதுராஜா தெரு,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>12.</td><td>திரு.சுந்தரம்,த/பெ.அய்யாகுட்டி,13ஏ,சந்தனமாரியம்மன்கோவில் தெரு,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>13.</td><td>திருமதி.ஹமீதா பீவி,க/பெ.பக்கீர் முகைதீன்,165,சிவன்கோவில் தெரு,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>14.</td><td>திரு.கணேசன்,த/பெ.தட்சிணாமூர்த்தி,16டி,சிவன்கோவில் தெரு,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>15.</td><td>திரு.நூர்தீன்,த/பெ.சேக் முகம்மது,45,நயினார் தெரு,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>16.</td><td>திருமதி.மொகதூம்பீவி,க/பெ.கபீர்,71சி,உச்சிமாகாளியம்மன் கோவில்தெரு,காயல்பட்டணம்</td></tr>
<tr><td>17.</td><td>திருமதி.ரெஜினா,க/பெ.தோமினிக்,25சி,சிங்கித்துறை,காயல்பட்டணம்</td></tr>
</table></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>30.05.2018</td><td>1571</td><td>மன்றப்பொருள்:-3<br>காயல்பட்டணம் நகராட்சி பொதுசுகாதார வாகனம் எண்:TN69S0761, அபேய் ஆட்டோ வாகனத்திற்கு மராமத்து பணிகள் (2018–2019) செய்து தகுதி சான்று பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><td>வ.எண்</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>தொகை (ரூ)</td></tr>
<tr><td>1</td><td>அய்யனார் ஆட்டோ மொபைல் என்ஜினியரிங் ஒர்க்ஸ்,தூத்துக்குடி</td><td>67732/–</td></tr>
<tr><td>2</td><td>ஜெய் ஆட்டோ கேரேஜ்,தூத்துக்குடி</td><td>69500/–</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்:2–ஐ விட வரிசை எண்:1 அய்யனார் ஆட்டோ மொபைல்ஸ், தூத்துக்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்கு.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.05.2018</td><td>1572</td><td>மன்றப்பொருள்:-4<br>காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்காக சிறிய மடிக்கணினி(Mini Laptop) ஒன்று வாங்குவதற்கு மன்ற அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><td>வ.எண்</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>தொகை (ரூ)</td></tr>
<tr><td>1</td><td>Avalon Data Products,Tirunelveli</td><td>18990/–</td></tr>
<tr><td>2</td><td>Sun Net Systems,Tirunelveli</td><td>19800/–</td></tr>
<tr><td>3</td><td>Sakthi Systems,Tirunelveli</td><td>19500/–</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்:2 (ம) 3ஐ விட வரிசை எண்:1 Avalon Data Products,Tirunelveli நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும், அதற்கான செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.05.2018</td><td>1573</td><td>மன்றப்பொருள்:-5<br>காயல்பட்டணம் நகராட்சியில் உள்ள 18 வார்டுகளில் சேகரமாகும் குப்பைகளை மட்கும் குப்பை, மட்காத குப்பை என தரம்பிரித்து மட்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த மட்கும் குப்பைகளை மிக எளிதாக மிக விரைவாக மட்கச் செய்ய E.M.Solution பயன்படுத்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் ஆய்வுக்கூட்டத்தில் Tamil Nadu Multipurpose Indco Serve நிறுவனம் மூலம் பயன்பாடு மற்றும் செயல்விளக்கம் பற்றி கூறப்பட்டது. தற்சமயம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களும் மட்கும் குப்பையினை தரம்பிரித்து உரம் தயாரிக்க வலியுறுத்தப்பட்டதால் மேற்படி Tamil Nadu Multipurpose Indco Serve திருச்சி என்ற நிறுவனத்திலிருந்து முதற்கட்டமாக 200 லிட்டர் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் ஆகும்.மேற்படி செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.05.2018</td><td>1574</td><td>மன்றப்பொருள்:-6<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பதற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:7234/14/ஆர்1, நாள்15.03.2018–ன் படி ஆட்சேபணை ஏதும் இருப்பின் 30 தினங்களுக்குள் தெரிவிக்கக் கோரி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்யப்பட்டு</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>30தினங்களுக்குள் கழிந்த நிலையில் இதுவரை யாவரிடமிருந்தும் ஆட்சேபணை கடிதம் வரப்பெறவில்லை. எனவே இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் அரசு வழிகாட்டுதலின்படி சொத்துவரி விதிக்கவும், அரசு நாளிதழில் பிரசுரம் செய்யவும் மன்ற அனுமதிக்கு.</td><td></td></tr>
<tr><td>30.05.2018</td><td>1575</td><td>மன்றப்பொருள்:-7<br>காயல்பட்டணம் நகராட்சியில் வடகிழக்கு பருவ மழையின் (NEM) காரணமாக சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1563 நாள்.27.04.2018ன்படி மன்ற அனுமதி பெறப்பட்ட கீழ்க்கண்ட இரண்டு பணிகளுக்கு 23.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு (இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர்பெயர்/முகவரி</th><th>ஒப்பந்த வகை</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">காயல்பட்டணம் நகராட்சி லட்சுமிபுரம் மெயின் சாலை தார்ச்சாலை மேம்பாடு செய்தல்</td><td rowspan="2">9.90</td><td>திரு.எம்.மலையாண்டி பிரபு, சாத்தான்குளம்</td><td>மதிப்பீடு ரேட்டை விட 0.10% குறைவு</td></tr>
<tr><td>திரு.ஆர்.தலவாணிமுத்து, காயல்பட்டணம்</td><td>மதிப்பீடு ரேட்டை விட 8.36% கூடுதல்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">காயல்பட்டணம் நகராட்சி பாரிமார் தெரு சாலை தார்ச்சாலை மேம்பாடு செய்தல்</td><td rowspan="2">9.90</td><td>திரு.எம்.மலையாண்டி பிரபு, சாத்தான்குளம்</td><td>மதிப்பீடு ரேட்டை விட 0.10% குறைவு</td></tr>
<tr><td>திரு.ஆர்.தலவாணிமுத்து, காயல்பட்டணம்</td><td>மதிப்பீடு ரேட்டை விட 8.36% கூடுதல்</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.(1) மற்றும் (2) ல் கண்ட பணிகளுக்கு திரு.எம்.மலையாண்டி பிரபு,சாத்தான்குளம் என்பவர் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார்.அவரது குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.05.2018</td><td>1576</td><td>மன்றப்பொருள்:-8<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்:1824/2018/A2, நாள்:29.05.2018–ல் தெரிவித்துள்ளபடி காயல்பட்டணம் நகராட்சிக்கு GST எண் பெறுவதற்கு Relywin Tax Info Services, கோவில்பட்டி நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு GST எண் பெறப்பட்டது. எனவே அதற்கான பட்டியல் தொகை ரூ.1500/– மட்டும் மேற்படி நிறுவனத்திற்கு மேற்படி செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.05.2018</td><td>1577</td><td>மன்றப்பொருள்:-9<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் புதிய பேருந்து நிலையம் நகராட்சி அலுவலகம் மற்றும் நகரின் பிற பகுதிகளில் கழிப்பிடங்கள் கட்டி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது. இந்த கழிப்பிடங்களில் உள்ள கழிவு நீர் நச்சுத் தொட்டியானது நிறைந்தவுடன் அதனை அகற்ற வேண்டியுள்ளது. இதற்கு தனியார் கழிவு நீர் வாகனம் பயன்படுத்தப்பட்டுவருகிறது. மேற்படி வாகனத்திற்கு ஒரு ஆண்டிற்கு உண்டாகும் உத்தேச செலவு ரூ.80000/– ஆகும். மேற்படி செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

**30.05.2018** | 1578

மன்றப்பொருள்:-10

காயல்பட்டணம் நகராட்சியில் உள்ள பொதுசுகாதார வாகனம் மற்றும் அலுவலக ஈப்பு வாகனம் குடிநீர் வாகனம் ஆகியவைகளுக்கு பழுதுகள் சரிசெய்வதற்கு ஓட்டுநர் திருஇராதாகிருஷ்ணன் என்பவரால் சில்லறை செலவு செய்த வகைக்கு கீழ்க்கண்ட பில்பட்டியல் தொகை ரூ.3090/– மட்டும் ஓட்டுநர் வழங்கக் கோரியுள்ளார்.

| வ.எண் | வாகனம் எண் | தொகை(ரூ) |
|---|---|---|
| 1 | TN69S0146 | 540/– |
| 2 | TN69AT2821 | 750/– |
| 3 | TN92A6369 | 950/– |
| 4 | TN69AY603 | 850/– |
| | மொத்தம் | 3090/– |

எனவே ஓட்டுநர் திரு.இராதாகிருஷ்ணன் என்பவருக்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி சில்லறை செலவினம் மேற்கொண்ட வகைக்கு ரூ.3090/– மட்டும் இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.

அனுமதிக்கப்பட்டது

---

**30.05.2018** | 1579

மன்றப்பொருள்:-11

காயல்பட்டணம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகள் குறித்து தினசரி நாளிதழில் விளமபரம் செய்த வகைக்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் தொகை கோரப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிகள் | நாளிதழ் பெயர் | தொகை(ரூ) |
|---|---|---|---|
| 1 | தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதித்தல் அறிவிப்பு கடிதம் | தினத்தந்தி | 18690/– |
| 2 | பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்றும் நிலையத்தில் குளோரினேட்டர் பிளாண்ட் அமைத்தல் (ம) ஐநூற்றி நங்கையம்மன் கோவில் தெருவில் ஏற்கனவே அமைக்கப்பட்ட குளோரினேட்டர் பிளாண்டினை சர்வீஸ் செய்து புதிய குடிநீர் குழாய் பொருத்துதல் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | தினத்தந்தி | 12060/– |
| 3 | லட்சுமிபுரம் மெயின் சாலை தார்ச்சாலை மேம்பாடு செய்தல் (ம) பரிமார் தெரு சாலை தார்ச்சாலை மேம்பாடு செய்தல் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | மக்கள் முகம் | 13440/– |
| 4 | | பிற்பகல் | 11760/– |

மேற்படி பட்டியல் தொகை விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழ் நிறுவனத்திற்கு இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.

அனுமதிக்கப்பட்டது

---

**30.05.2018** | 1580

மன்றப்பொருள்:-12

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை ண்:11, நாள்:12.01.1994–ன் படி காயல்பட்டணம் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் தொழில் ஸ்தாபனங்கள் மற்றும் பணியாளர்களின் அரையாண்டு தொழில்வரி 01.10.2013 முதல் கீழ்க்குறிப்பிட்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

அனுமதிக்கப்பட்டது

| வ.எண் | அரையாண்டு வருமானம் | வரி தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | ரூ.21000–வரை | – |
| 2 | ரூ.21001 முதல் ரூ.30000 வரை | 120/– |
| 3 | ரூ.30001 முதல் ரூ.45000 வரை | 300/– |
| 4 | ரூ.45001 முதல் ரூ.60000 வரை | 590/– |
| 5 | ரூ.60001 முதல் ரூ.75000 வரை | 890/– |
| 6 | ரூ.75001–க்கு மேல் | 1175/– |

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 21/05/2018–ம் தேதிய ந.க.எண்:12503/18/ஆர்.1, சுற்றறிக்கையின் அடிப்படையில் 01/10/2018 முதல் தொழில்வரி 25% வீதத்திற்கு குறையாமல் 35% வீதத்திற்கு மிகாமல் 5 வருடத்திற்கு ஒருமுறை தொழில்வரி சீராய்வு செய்ய அறிவுரை வழங்கப்பட்டதன் அடிப்படையில் காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட தொழில் ஸ்தாபனங்கள் மற்றும் பணியாளர்களின் அரையாண்டு தொழில்வரியை 01/10/2018 முதல் (2018–2019 இரண்டாவது அரையாண்டு) இந்நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு அதிகபட்சம் 35% உயர்வு செய்து கீழ்க்காணும் விபரப்படி தொழில்வரி நிர்ணயம் செய்ய மன்ற அனுமதிக்கு.

| வ.எண் | அரையாண்டு சராசரி வருமானம்(ரூ) | தற்போது வசூல் செய்யப்பட்டுவரும் தொழில்வரி(ரூ) | 35% உயர்வு(ரூ) | 01/10/2018 முதல் நிர்ணயம் செய்யப்படும் தொகை(ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 21000 வரை | – | – | – |
| 2 | 21000 முதல் 30000 வரை | 120/– | 42/– | 162/– |
| 3 | 30001 முதல் 45000 வரை | 300/– | 105/– | 405/– |
| 4 | 45001 முதல் 60000 வரை | 590/– | 207/– | 797/– |
| 5 | 60001 முதல் 75000 வரை | 890/– | 312/– | 1202/– |
| 6 | 75001 க்கு மேல் | 1175/– | 411/– | 1586/– |

**30.05.2018**

1581

## மன்றப்பொருள்:-13

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் பிரதி வாரம் தோறும் ஆய்வுக்கூட்டம் நடைபெற்று வருகிறது. அதில் தற்சமயம் கோடைகாலம் என்பதால் குடிநீரை சரியாக வழங்கவும், குடிநீரில் குளோரின் கலந்திருப்பதை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டது. அதில் ஒரு பகுதியாக குடிநீரில் குளோரின் அளவை அளக்கும் குளோரோ ஸ்கோப் இந்நகராட்சியில் தற்சமயம் ஒன்று மட்டுமே உள்ளது. மேலும் குளோரின் அளவை அளக்க பரப்புரையாளர் (ம) பரப்புரையாளர் மேற்பார்வையாளருக்கு ஒன்று வீதம் 5 எண்ணங்கள் வாங்குவதற்கும், Liquid Clorite வாங்குவதற்கும் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு 2 விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

<u>குளோரோ ஸ்கோப்</u>

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை(ரூ) |
|---|---|---|
| 1 | ராஜ் றிரேடர்ஸ்,தூத்துக்குடி | 775/– |
| 2 | புளூ டைமன்ட் சைன்டிபிக் சப்ளைஸ்,தூத்துக்குடி | 750/– |
| 3 | மெஜஸ்டிக் சைன்டிபிக் கம்பெனி | 765/– |

அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | Liquid Clorite<br><br>வ.எண் \| நிறுவனத்தின் பெயர் \| தொகை(ரூ)<br>1 \| ராஜ் டிரேடர்ஸ்,தூத்துக்குடி \| 454/–<br>2 \| புளூ டைமன்ட் சைன்டிபிக் சப்ளைஸ்,தூத்துக்குடி \| 398/–<br>3 \| மெஜஸ்டிக் சைன்டிபிக் கம்பெனி \| 431/–<br><br>மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்:1 (ம) 3 ஐ விட வரிசை எண்:2 புளூ டைமன்ட் சைன்டிபிக் சப்ளைஸ்,தூத்துக்குடி நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி வழங்கிய மேற்படி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க அனுமதிக்கும், அதற்குண்டான செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | |
| **30.05.2018** | 1582 | மன்றப்பொருள்:-14<br>காயல்பட்டணம் நகராட்சிப்பகுதிகளின் முக்கிய இடங்களில் பொதுமக்கள் பாதுகாப்பு கருதி சி.சி.டி.வி கேமரா பொருத்துவதற்கும், அதற்கான செலவு தொகையினை இந்நகராட்சி வருவாய் (ம) மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| **30.05.2018** | 1583 | மன்றப்பொருள்:-15<br>காயல்பட்டணம் நகராட்சி அலுவலக கணினி 12 எண்ணங்களுக்கு Anti virus Software Peguses,திருநெல்வேலி நிறுவனத்தின் மூலம் பொருத்துவதற்கும், அதற்கான செலவுத்தொகை ரூ.8460/– வழங்குவதற்கும் கணினி பயன்பாட்டிற்கு பிரிண்டிங் எடுக்க தேவையான டோனர்கள் வாங்குவதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்:1557,நாள்:28.03.2018–ன்படி மன்ற அனுமதி வழங்கியுள்ளதால் Peguses,திருநெல்வேலி நிறுவனத்திடமிருந்து டோனர்கள் வாங்குவதற்கும் உரிய செலவு தொகை வழங்குவதற்கும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| **30.05.2018** | 1584 | மன்றப்பொருள்:-16<br>காயல்பட்டணம் நகராட்சியில் வரி விதிக்கப்பட்ட இனங்களுக்கு வீட்டுக்குடிநீர் இணைப்பு வழங்கப்படாத 6010 இனங்களுக்கு வீட்டுக்குடிநீர் இணைப்புகள் வழங்கிட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.350.00இலட்சத்திற்கு டுபிட்கோ நிறுவனத்தின் மூலம் வட்டியில்லா கடனாக நிதி ஒதுக்கீடு பெற்றிட நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| **30.05.2018** | 1585 | மன்றப்பொருள்:-17<br>காயல்பட்டணம் நகராட்சியில் சேகரிக்கப்பட்ட குப்பைகள் பல ஆண்டுகளாக பப்பரப்பள்ளி என்ற இடத்தில் கொட்டப்பட்டு வரப்படுகிறது. தற்பொழுது இங்கு கொட்டப்பட்டுள்ள குப்பைகளை அகற்றி மறுசுழற்சி செய்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.130.00இலட்சத்திற்கு தூய்மை இந்தியா திட்டம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெற்றிட நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| **30.05.2018** | 1586 | மன்றப்பொருள்:-18<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொது சுகாதாரப்பணியில் குப்பைகளை சேகரிக்க போதுமான வாகனங்கள் இல்லாததால் பேட்டரியால் இயங்கக்கூடிய வாகனம் நகராட்சிக்கு தேவைப்படுவதால் தற்பொழுது நகராட்சிக்கு 30 எண்ணம் பேட்டரி வாகனம் வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.54.00இலட்சத்திற்கு தூய்மை இந்தியா திட்டம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெற்றிட நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| **30.05.2018** | 1587 | மன்றப்பொருள்:-19<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் விநியோகக்குழாய்கள் பதிக்கப்பட்டு பல வருடங்கள் ஆகி விட்டபடியால் அடிக்கடி உடைப்புகள் ஏற்பட்டு குடிநீர் விரயம் ஏற்படுகிறது. மேலும் உடைப்புகள் ஏற்பட்டு குடிநீர் வீணாகும் இடங்களில் சுகாதார சீர்கேடு ஏற்படும் என்பதாலும் தற்பொழுது நகராட்சியின் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவி வருவதாலும் மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கண்டிப்பான அறிவுரையின்படியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்லேி அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படியும் நகராட்சிப்பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் விநியோகக்குழாய்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை சீரமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| **30.05.2018** | 1588 | மன்றப்பொருள்:-20<br>காயல்பட்டணம் நகராட்சியில் டெங்கு காய்ச்சல் பரவி வருவதால் குடிநீரில் குளோரின் கலந்து பாதுகாப்பான முறையில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கிடவும் நகராட்சிப்பகுதிகளில் பொதுசுகாதாரப்பணிகளை நல்ல முறையில் மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் நேரடியாக கண்டிப்புடன் அறிவுறுத்தப்பட்டதால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் தேவையான அளவு குளோரின் கலந்து பாதுகாப்பான முறையில் குடிநீர் வழங்கிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில்ஆகஸ்ட் 2018 முதல் ஜுலை 2019 வரை உள்ள 12 மாத காலங்களுக்கு குடிநீர் பணிக்கான குளோரின் சிலிண்டர்கள் (100 கிலோ கிராம்) 24 எண்ணம் வாங்கிடவும் அதற்குரிய செலவினத்தொகை ரூ.2.50இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| **30.05.2018** | 1589 | மன்றப்பொருள்:-21<br>காயல்பட்டணம் நகராட்சியில் 5 பணியாளர்கள் மற்றும் ஒரு வாகன ஓட்டுநர் ஆகியோரை குடிநீர் விநியோகப்பணியில் பயன்படுத்த ஏதுவாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.70இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண். 1320 நாள்.10.11.2016 ன்படி நகர்மன்ற அனுமதி பெறப்பட்டு அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.டி.மாதவன்,ஓடக்கரை என்பவருக்கு நகர்மன்ற தீர்மானம் எண். 1417 நாள். 25.07.2017ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு அதன் அடிப்படையில் வேலை உத்திரவு 25.07.2017அன்று வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் தற்பொழுது வரை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் பணி செய்து வருகின்றனர்.தற்பொழுது மதிப்பீட்டுத்தொகைக்கு பணி செய்யப்பட்டு மதிப்பீட்டுத்தொகை முடிவடையும் நிலையில் உள்ளது. தற்பொழுது குடிநீர் பணியானது அத்தியாவசிய பணியாக இருப்பதாலும் நகராட்சியில் குடிநீர் பணிக்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் தற்பொழுது காயல்பட்டணம் குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தில் மட்டுமே நகராட்சிக்கு போதுமான குடிநீர் பெறப்பட்டு நகராட்சியில் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. மேலும் நகராட்சியில் டெங்கு காய்ச்சல் பரவி வருவதால் குடிநீர் பணியில் எந்த விதமான பாதிப்பும் இல்லாத வகையில் விநியோகம் செய்திட மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் கண்டிப்புடன் அறிவுறுத்தியதாலும் பணியாளர்களை பணியமர்த்திய ஒப்பந்ததாரரின் ஒப்பந்தக்காலம் முடிவடைவதால் நகராட்சியில் உள்ள குடிநீர் விநியோகப்பணியானது சீராக இயங்குவதற்கு குடிநீர் பணியின் அவசரஅவசியத்தைக்கருதி தற்போதுள்ள குடிநீர் விநியோகப்பணியின் நிலையைக்கருத்திற்கொண்டும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரினை தினசரி விநியோகம் செய்திட தேவையான நடவடிக்கையினை எடுத்திட மாவட்ட ஆட்சியரின் நேரடி அறிவுரையின்படி தெரிவிக்கப்பட்டதால் நகராட்சியில் முதற்கட்டமாக ஒன்று முதல் ஒன்பது வார்டுகளுக்கு (வார்டு எண்.1 முதல் வார்டு எண்.9) உட்பட்ட பகுதிகளில் தினசரி குடிநீர் வழங்கிட தேவையான நடவடிக்கைகளை நகராட்சியின் மூலம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தற்பொழுது குடிநீர் விநியோகப்பணியில் கூடுதலாக 6 (ஆறு) பணியாளர்கள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான ஜே.சி.பி வாகனத்தை இயக்குவதற்கு 1(ஒரு) ஜே.சி.பி வாகன ஓட்டுநர் ஆக மொத்தமாக 7(ஏழு) பணியாட்களை பயன்படுத்தி குடிநீர் விநியோகப்பணிகளை ஒரு வருடத்திற்கு செய்திட தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விலைவிகிதப்பட்டியல் 2018-19ன்படி அனுமதிக்கப்பட்ட விலையில் (PWD Schedule of rates 2018-19) தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| **30.05.2018** | 1590 | மன்றப்பொருள்:-22<br>காயல்பட்டணம் நகராட்சியில் UIDSSMT –திட்டத்தின் கீழ் குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்த ரூ.2967.00இலட்சங்கள் மதிப்பில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதன் அடிப்படையில் மன்ற அனுமதி பெறப்பட்டு M/s ஸ்ரீராம் இபிசி லிட்,சென்னை என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு தற்பொழுது திட்டமதிப்பீட்டில் உள்ள வீட்டுக்குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணியினைத்தவிர மற்ற அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது வீட்டுக்குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் தலைமை நீரேற்றும் நிலையம் பொன்னன்குறிச்சியில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு எண்ணம் 100HP திறனுள்ள இரண்டு மின்மாட்டார்கள் மற்றும் ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள 6 எண்ணம் நீர் உறிஞ்சும் கிணற்றில் அமைந்துள்ள 7.50 HP திறனுள்ள 12 மின்மோட்டார்கள் அதனை இயக்குவதற்குரிய மினசார உபகரணங்கள் அனைத்தும் தலைமைநீரெற்றும் நிலையத்தில் உள்ளது. மேலும் 11கேவி திறனுள்ள மின்மாற்றி மற்றும் 200 கேவி திறனுள்ள ஜெனரேட்டர் ஆகியவைகளும் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ளது. இவைகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை இதுவரை ஒப்பந்ததாரர் நிறுவனத்தின் பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டது. தற்பொழுது திட்டத்தில் முடிக்கப்பட்ட பணிகளை நகராட்சி வசம் ஒப்படைக்க அந்நிறுவனம் முடிவு செய்துள்ளதால் தலைமை நீரேற்றும் நிலையத்தில் இயக்கதல் மற்றும் பராமரிப்பு பணிகளை நகராட்சியின் மூலம் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட மின் பணிகளை இயக்கவும் பராமரிக்கவும் நகராட்சியில் அதற்குரிய பணியாளர்கள் இல்லாததால் ஒரு மின் பணியாளர் நிலை ஐ , மின் உதவியாளர் ஒரு நபர் மற்றும் பணியாளர்கள் 4 நபர்கள் ஆகியோர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து ஒப்பந்ததாரர் மூலம் ஒரு வருடத்திற்கு பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விலைவிகிதப்பட்டியல் 2018-19ன்படி அனுமதிக்கப்பட்ட விலையில் (PWD Schedule of rates 2018-19) தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| **30.05.2018** | 1591 | மன்றப்பொருள்:-23<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கழிப்பறை (ம) கடற்கரை பூங்கா கழிப்பறை ஆகியவற்றில் பணிகள் முடிக்கப்பட்டு பொதுப்பணி மேற்பார்வையாளர் அறிக்கை வழங்கியுள்ளார். அதன்படி மேற்படி வருவாய் பெறத்தக்க இனங்களை கட்டண கழிப்பறையாக மாற்றி பொது ஏலம் கோர மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |